www.Padasalai.Net www.TrbTnpsc.com

CamScanner

விழுப்புரம் மாவட்டம் - 605755.

வகுப்பு : 12

தேர்வு எண் 1 2 0 1 4 *

# முதல் திருப்புதல் தேர்வு - ஜனவரி - 2024

## தமிழ்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 90

அறிவுரைகள் : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி – I

குறிப்பு : அ) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14X1=14

ஆ) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

1. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழைமேகங்கள் இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்

2. ஆழமான ஆன்மீகக் கருத்துகள் நிரம்பிய இசைக்கவிதைகளின் தொகுப்பு

அ) திவான் ஆ) சீக்ரட்வே

இ) பில்கிரிம்ஸ் புரோகிரமஸ் ஈ) மஸ்னவி

3. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்காலச்சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன, அவை ------

அ) திருமணமும் குடும்பமும் ஆ) மன்றங்களும் அவைகளும்

இ) நிதியமும் சுங்கமும் ஈ) அறவோரும் துறவோரும்

4. நெஞ்சம் இளகி விரிவெய்த விரிவெய்த அறிவிலே சுடர் ஏறுகிறது என்றவர்

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) நெல்லையப்பர் ஈ) பத்மநாபன்

5. கடையேழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

அ) ஆய் அண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக்கோடனும் குமணனும்

இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

6. விருத்தம் என்னும் ஒரே வகைச் செய்யுளில் அமைந்தவை –

அ) சிலப்பதிகாரம், மணிமேகலை ஆ) சீவக சிந்தாமணி, கம்பராமாயணம்

இ) வளையாபதி, குண்டலகேசி ஈ) பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு

7. சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் – காரணம்

அ) நேரடி – மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்

ஆ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை

இ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு

ஈ) அ, ஆ, இ அனைத்து



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

CamScanner
www.Padasalai.Net www.TrbTnpsc.com

8. உழாஅது – இலக்கணக்குறிப்புத்தருக?
அ) சொல்லிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை
இ) ஒற்றளபெடை ஈ) செய்யுளிசை அளபெடை
9. 'குழிமாற்று' எந்தத்துறையோடு தொடர்புடைய சொல்?
அ) இலக்கியம் ஆ) கணிதம் இ) புவியியல் ஈ) வரலாறு
10. வெண்சீர்வெண்டளை –
அ) மாமுன் நேர் ஆ) விளம்முன் நேர் இ) காய்முன் நேர் ஈ) கனிமுன்நேர்
11. பொருத்துக.
அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் – 1. சேர்ந்தாரைக் கொல்லி 3
ஆ) பயன் தூக்கார் செய்த உதவி – 2. ஞாலத்தின் மாணப் பெரிது 4
இ) சினம் – 3. தெய்வத்துள் வைக்கப்படும் 1
ஈ) காலத்தினால் செய்த நன்றி – 4. நன்மை கடலின் பெரிது 2
அ) 3 4 2 1 ஆ) 4 3 2 1 இ) 2 4 3 1 ஈ) 3 4 2 1
12. METRO TRAIN கலைச்சொல்லாக்கம் தருக.
அ) விரைவு தொடர்வண்டி ஆ) ஆகாயத்தொடர்வண்டி
இ) மாநகரத் தொடர்வண்டி ஈ) சரக்குத் தொடர் வண்டி
13. ஈறுபோதல், இனமிகல் – என்னும் விதிகள் படி புணரும் சொல்
அ) நல்லாடை ஆ) பெருங்கடல் இ) சிறுபறை ஈ) செந்தமிழ்
14. உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரலபிறவே – இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல் –
அ) நன்னூல் ஆ) அகத்தியம்
இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்

## பகுதி – II

### பிரிவு–1

எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக. 3x2=6

15. தண்டியலங்காரம் – குறிப்பு வரைக.
16. 'எத்திசையிலும் சோறு தட்டாது கிட்டும்' – எதற்கு?
17. பகைவராலும் அழிக்க முடியாத அரண் யாது?
18. முகம் முகவரியற்றுப் போனதற்குச் சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணம் யாது?

### பிரிவு–2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x2=4

19. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' – என்னும் முழக்கத்தொடர் எவற்றை வலியுறுத்துகிறது.
20. கீழ்த்திசைச்சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.
21. 'களப்பிரர் ஆட்சியில் தமிழகம்' என்னும் நூல்மூலம் மயிலையார் வெளிப்படுத்தியது யாது?



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

CamScanner


பிரிவு–3

எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக. 7x2=14

22. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

23. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) கலை, களை, கழை

ஆ) தின்மை, திண்மை

24. காப்பியத்தைச் குறிக்கும் பிற பெயர்கள் யாவை?

25. மரபுச்சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) ஆணி அடித்தாற் போல

ஆ) வழி வழியாக

26. ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி கூறுக.

அ) செல்லிடத்து

ஆ) ஒருமையுடன்

27. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.

அ) நெலத்தக்கௌறணும்டா அப்பதான் வகுறுநெறையும்

ஆ) ரவைக்குச்சித்தப்பன காவலுக்குப் போவச்சொல்.

28. கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடரமைக்க.

அ) வானம், பற, நிலவு, தொடு ஆ) குழந்தை, நட, தளிர்நடை, விழு

29. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) நடுவண் அரசு 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

ஆ) 1856 இல் தென்னிந்தியாவின் முதல் தொடர் வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது.

30. தொன்மம் – விளக்குக.

பகுதி – III

பிரிவு–1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக. 2x4=8

31. குகனோடு ஐவராகி வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டுக.

32. சூதும் கள்ளும் கேடு தரும் – குறள் வழி விவரி.

33. மழைக்கனவில் இருந்து விடுபடுகிறது இவ்வூர் – இடம் சுட்டிப்பொருள் விளக்குக.

34. கடையெழு வள்ளல்களையும் அவர்கள் செய்த செயலையும் அட்டவணைப்படுத்துக.

பிரிவு–2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2x4=8

35. சங்கப்பாடல்களின் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் விளக்குக.

36. இந்தோ – சாரசனிக் கட்டடக்கலை – விளக்குக.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

CamScanner


37. திரைப்படத்தின் காட்சி ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

38. வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு – எவ்வாறு

பிரிவு–3

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக. 3x4=12

39. அ) நெய்தல் திணை (அல்லது)

ஆ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

40. அ) பொருள் வேற்றுமையணி (அல்லது)

ஆ) எடுத்துக்காட்டு உவமையணி – சான்றுடன் விளக்குக.

41. வெண்பாவிற்கான இலக்கணங்களை எழுதுக.

42. தமிழர் பரம்பரை மரம் வரைக.

43. சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.

அ) தாமரை ஆ) கோவில் இ) வெங்காயம் ஈ) தலைமை

பகுதி – IV

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 3x6=18

44. அ) தமிழின் சீரளமைத் திறம்வியந்து சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றை விவரி.

(அல்லது)

ஆ) சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்தகோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?

45. அ) பண்டைக்காலக்கல்விமுறையில் ஆசிரியர்மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல் கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

ஆ) மயிலையார் ஓர் ஆராய்ச்சிப்பேரறிஞர் இக்கூற்றினைச் சான்றுகளுடன் நிறுவுக.

46. அ) "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" – என்னும் பழமொழிக்கேற்ப உரிமைத்தாகம் கதை அமைந்துள்ளதை விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) "கோடைமழை" கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

பகுதி – V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4+2=6

47. அ) "பாதகர்குழுமிச்சொற்ற ...... " எனத்துவங்கும் இரட்சணிய யாத்திரிகம் பாடல்

ஆ) '..... சினம்' – என முடியும் குறளை எழுதுக.



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com